**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குமாரபாளையம்**

**அ.வ.எண்.259/2020**

**நாள்– 06.11.2025**

**பி.வா.சா. 1 – திரு.பூபதி**

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1) நான் இந்த வழக்கின் 2ம் பிரதிவாதி ஆவேன். இவ்வழக்கின் 2ம் வாதி ஆனந்தன் ஆவார். கடந்த 14.07.2022 தேதியிட்ட குறுக்கு விசாரணையில் பக்கம் 2ல் 5வது வரியில் 2ம் பிரதிவாதி "எங்கு உள்ளார் என்றால் பவானி காலிங்கராயன்பாளையத்தில் விவசாயம் செய்து வருகிறார்" என்று உள்ளது, ஆனால் 2ம் வாதிதான் பவானி காலிங்கராயன்பாளையத்தில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். எனக்கு பூர்வீகம் எந்த ஊர் என்றால் திண்டுக்கல் மாவட்டம், கூத்தம்பூண்டி கிராமம் ஆகும். 1ம் பிரதிவாதிக்கும் கூத்தம்பூண்டி கிராமம்தான் பூர்வீகம் என்றால் சரிதான். 2ம் வாதியின் பூர்வீகம் எது என்றால் திண்டுக்கல் மாவட்டம், கூத்தம்பட்டி கிராமம், மார்க்கண்டாபுரம் ஆகும். 2ம் வாதிக்கு மார்க்கண்டாபுரத்தில் விவசாய நிலங்கள் உள்ளன என்றால் சரிதான். தாவா சொத்தினை 1ம் பிரதிவாதியிடம் என்ன விலைக்கு கிரையம் பேசினேன் என்றால் ரூ.16,00,000/– ஆகும். எப்படி கிரையத் தொகையினை ரொக்கமாக 1ம் பிரதிவாதியிடம் கொடுத்தேனா என்றால் ரூ.1,00,000/–ற்கு காசோலையாகவும், மீதம் தொகையினை ரொக்கமாகவும் செலுத்தினேன்.

2. வா.சா.ஆ.7ல் 2 காசோலை எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.7ல் 2 காசோலைகளில் தலா ரூ.3,00,000/– என மொத்தம் ரூ.6,00,000/– 1ம் பிரதிவாதிக்கு செலுத்தியதாகக் கண்டுள்ளது என்றால் சரிதான், மேற்படி காசோலைகளை என்னிடம் திருப்பிக் கொடுத்துவிட்டு ரொக்கமாக பெற்றுக் கொண்டார். எனது எதிர்வழக்குரையில் "On 12.01.2016 this defendant purchased 1/5 share of the 1st defendant for a valid consideration of Rs.600000/– by way of 2 cheques drawn on Karur Vysya Bank and the same were encashed" என்று கண்டுள்ளது என்றால் சரிதான். எனது எதிர்வழக்குரையில் எனது பிரமாணப் பத்திரிக்கையிலோ 1ம் பிரதிவாதி மேற்படி காசோலைகளைத் திரும்ப பெற்றுக் கொண்டு ரொக்கமாகக் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் கூறுவது போல 1ம் பிரதிவாதி மேற்படி காசோலைகளைத் திரும்ப பெற்றுக் கொண்டு ரொக்கமாகக் கொடுத்திருந்தால் எனது எதிர்வழக்குரையிலும், பிரமாணப் பத்திரிக்கையிலும்

குறிப்பிட்டிருப்பேன் என்றாலும், அவ்வாறு குறிப்பிடாமல் தற்போது வழக்கிற்காக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

3.வா.சா.ஆ.7ல் சொல்லியுள்ள காசோலைகள் பற்றி வாதிகள் தரப்பு கரூர் வைஸ்யா மேலாளரை விசாரித்த பின்பு மேற்படி காசோலைகள் வசூலிற்கு வரவில்லை என்று நிரூபித்த பின்பு காசோலையினை 1ம் பிரதிவாதி திருப்பி பெற்றுக் கொண்டு ரொக்கமாகக் கொடுத்தாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 போலியாக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்பதால்தான் முன்னுக்குப் பின் முரணாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி தாவா நிலுவையில் இருந்தபோதுதான் 3ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தினை விற்றேன் என்றால் சரிதான், நீதிமன்றத்திற்கு சொத்துக்களை விற்கக்கூடாது என்று உத்தரவு எதுவும் இல்லாததால் எனது தாயாரின் மருத்துவ செலவிற்காக விற்றேன். நான் தாவா சொத்தினை விற்பதற்கு நீதிமன்றத்தில் அனுமதி வாங்கினேனா என்றால் இல்லை.

4. 3ம் பிரதிவாதியிடம் தாவா நிலுவையில் உள்ளது குறித்து கூறினேனா என்றால் கூறினேன். தாவா குறித்து என்ன விவரம் கூறினேன் என்றால் தாவா சொத்து குறித்து தாவா நிலுவையில் உள்ளதாகவும், அதனை முடித்துக் கொடுப்பது எனது கடமை என்றும் கூறினேன். 3ம் பிரதிவாதியிடம் வா.சா.ஆ.7 குறித்து அனைத்து சங்கதிகளையும் தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன். மேற்படி தாவா சொத்தினை காசோலை மூலமாக வாங்கப்பட்டதா அல்லது ரொக்கமாக பணம் கொடுத்து கிரையம் வாங்கப்பட்டதா என்ற விவரத்தினை கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். 3ம் பிரதிவாதியிடம் காசோலை மூலமாக மட்டும்தான் வா.சா.ஆ.7ன் மூலம் நான் தாவா சொத்தினைக் கிரையம் வாங்குவதற்காக முழு பிரதி பிரயோஜனம் செலுத்தப்பட்டதாகக் கூறியுள்ளேன் என்றாலும், அவ்வாறு தான் 3ம் பிரதிவாதி எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வாதிகளை ஏமாற்ற வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில்தான் தாவா சொத்தினை 3ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துளேன் என்றால் சரியல்ல.

5. 3ம் பிரதிவாதி வாதிகளின் வழக்கினை நிராகரிக்க மனு தாக்கல் செய்த விவரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். 1ம் பிரதிவாதி எனது உறவினர் என்றால் சரிதான், 2ம் வாதியும் எனது உறவினர் ஆவார். 1ம் பிரதிவாதி கடன் வாங்கிய விவரம் எனக்குத் தெரியுமா என்றால் நான் கிரையம் வாங்கியபோது தெரியாது. 1ம் பிரதிவாதி அவருக்கு கடன் கொடுத்தவர்களுக்கு கடனைத்

திருப்பிச் செலுத்தாமல் ஏமாற்ற வேண்டி தான் கெட்ட எண்ணத்தோடு எந்த ஒரு பிரதி பிரயோஜனமும் இன்றி தாவா சொத்தினை எனக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.7 கடன்தாரர்களை ஏமாற்றும் எண்ணத்தில் எழுதப்பட்ட பொய் ஆவணம் என்றால் சரியல்ல. கடன்களை திருப்பிச் செலுத்தும் அளவிற்கு தாவா சொத்தின் மதிப்பீடு இருந்தும் குறைந்த தொகையினை மதிப்பிட்டு எந்தவொரு பிரதி பிரயோஜனமும் இன்றி பொய் ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 ஆவணம் நல்லெண்ணத்தில் எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. வாதிகள் வசதியுடையவர்கள் என்றாலும் வழக்கிற்காக வசதி இல்லாதவர்கள் என்று வழக்கிற்காக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி கிரையத் தொகை ரூ.6,00,000/-னை பணமாக்கிக் கொண்டார் என்று வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு வாதிகள் கடன் கொடுத்துள்ளது குறித்து எனக்குத் தெரிந்தும் தெரியாது என்று பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. இ.ம.எண்.409/2017ல் நான் 2ம் எதிர்மனுதாரர் என்றால் சரிதான். மேற்படி மனுவினை வாதிகள் இந்த வழக்கினை தங்களுக்காகவும், 1ம் பிரதிவாதி கடன்தாரர்களுக்காகவும், பிரதிநிதித்துவ அடிப்படையில் வழக்கினைத் தாக்கல் செய்து நடத்திவருகிறார்கள் என்றால் சரிதான். மேற்படி மனுவில் நான் எதிர்மனுதாரராக இருந்தும் வாதிகள் பிரதிநிதித்துவ அடிப்படையில் வழக்கினைத் தாக்கல் செய்து நடத்த அனுமதி வாங்காததாக பொய்யாகக் கூறுகிறேன் என்றால் சரியல்ல.

7. 1ம் பிரதிவாதி கடன்தாரர்களை ஏமாற்ற வேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடன் 1ம் பிரதிவாதி எனது பெயரில் மாற்று முறை ஆவண சட்டத்திற்கு முரணாக தாவா சொத்தினை எனது பெயரில் கிரையம் செய்து கொடுத்த அடிப்படையில் வா.சா.ஆ.7 செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வாதிகள் கோரிய பரிகாரம் வாதிகளுக்குக் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**(மறுவிசாரணை இல்லை)**